2021 பிப்ரவரி 26] [திரு. S. செம்மலை]

தலைவர்களையெல்லாம் அழைத்து, சாட்சியங்களை பதியவைத்து, அந்தக் குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்து, குறிப்பாக இந்தக் குழு சிறப்பாகச் செயல்படுவதற்கு முழு ஒத்துழைப்பை நல்கிய நமது குழுவினுடைய அலுவலர்களுக்கும் இந்த நேரத்தில் நான் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கடந்த மூன்றாண்டுக் காலத்தில் தன்னாய்வுக்கு 4 துறைகளை நாங்கள் எடுத்துக்கொண்டோம். கள ஆய்வு செய்து, அதுகுறித்த அறிக்கைகளை எங்களால் பேரவைக்கு சமர்ப்பிக்க முடிந்தது. அந்தவகையில் குழு உறுப்பினர்களுக்கு ஒரு நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கின்றது. அந்த அனுபவத்திற்கு முழு காரணம் நிச்சயமாக நமது பேரவைச் செயலாளர் திரு. சீனிவாசன் என்று சொன்னால் அது மிகையாகாது. அதுபோல் இந்தக் குழுவின் அலுவலர் திரு. B. ரவிச்சந்திரன் அவர்களும், அவரோடு இணைந்து பணியாற்றிய குழுவின் அலுவலர்களும் எங்களுக்கு முழு ஒத்துழைப்பைக் கொடுத்த காரணத்தினால்தான், எங்களால் சிறப்பாகச் செயல்பட முடிந்தது.

நண்பகல் 12–00

அதுமட்டுமல்ல, 3 ஆண்டுகள் தொடர்ந்து என்னை இந்தக் குழுவின் தலைவராக நியமித்ததற்கு மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவராகிய தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகிய இருபெரும் தலைவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன். நன்றி.

(ஈ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள்.*

திரு. சு. ரவி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதப் புனிதர், மாணிக்கத் தலைவன், தன் வாழ்நாளில் சம்பாதித்த சொத்துக்களையெல்லாம் காது கேளாதவர்களுக்கும், கண் தெரியாதவர்களுக்கும், வாய் பேசாதவர்களுக்கும், முதியோர்களுக்கும், ஆதரவற்றோர்களுக்கும் வாரிவாரி வழங்கி, வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களை வணங்குகிறேன். எனக்குப் பின்னாலும்*

[திரு. சு. ரவி] [2021 பிப்ரவரி 26

தமிழகத்தை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான் 100 ஆண்டுகளானாலும் மக்கள் பணி ஆற்றும் என்று இந்தச் சட்டமன்றத்தில் சூளுரைத்து, வங்கக் கடலோரம் உறங்கிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களையும் வணங்கி, தமிழ்நாட்டு மக்களின் All pass முதலமைச்சராக, ஏழையெளிய மக்களுக்கு நித்தம் நித்தம் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற குடிமராமத்து நாயகன், ஒரு சாமானிய முதலமைச்சர் என்று தமிழகத்தில் நிரூபித்துக் கொண்டிருக்கின்ற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் ஐயா எடப்பாடியார் அவர்களை வணங்கி, தென்பாண்டி சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2021 ஆம் ஆண்டுகளுக்கான சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் 10–வது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

(உ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை அவர்கள்.

திரு. ஐ.எஸ். இன்பதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒர் அரசினுடைய திட்டம் சிறப்பான திட்டமா என்பதை எவ்வாறு கணக்கிட வேண்டுமென்று ஒருமுறை காந்தியடிகளிடம் கேட்டார்கள். நாட்டினுடைய "ஒரு திட்டம் கடைக்கோடி குடிமகனின் விழிநீரைத் துடைக்கிறதா, நொறுங்கிக் கிடக்கிற அவனுடைய இடுப்பு எலும்பைத் தொட்டு அவனைத் தூக்குகிறதா என்று பார்த்தால், அவ்வாறு செய்தால் அதுதான் சிறந்த திட்டம்" என்று சொன்னார் மகாத்மா காந்தியடிகள்.

ஏழையெளியவர்களின், விவசாயிகளின் கண்ணீரைத் துடைக்கின்ற திட்டங்களை நாள்தோறும் தந்து கொண்டிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின், ஆட்சித் தேரின் இரு சக்கரங்களாகச் செயல்பட்டு, அரசை முன்னேற்றப் பாதையில், விரைவாக நடைபோட்டு, செயல்படுத்திக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களையும், அவருக்குத்